இராதாபுரம் ஊராட்சி ஒன்றியம் உவரி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திருமதி.P.தேம்பாவணி அவர்கள்

ந.க.எண்: 01/2024-25

நாள்: 08-05-2024

பொருள்: மனைப்பிரிவு அனுமதி - திருநெல்வேலி மாவட்டம் - இராதாபுரம் ஊராட்சி ஒன்றியம் - கரைச்சுத்து உவரி கிராமம், உவரி ஊராட்சி சர்வே எண் 286/2A3, 2B2A, 350/1B2B1 & 350/1B2B2 இல் 2.42ஏக்கர் பரப்பில் குடியிறுப்பு மனைக்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடல் - தொடர்பாக

பார்வை: 1. நகர்ப்புற ஊரமைப்பு உதவி இயக்குனர் , மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம். திருநெல்வேலி மாவட்டம் , இணை இயக்குனர் தெற்கு புறவழிச் சாலை, அவர்களின்கடிதம் ந.க.எண் ROC. OM9GGVXk/2024/TCP நாள் 08-04-2024

2. சாலை மற்றும் பூங்கா ஒப்படைப்பு செய்து தானபத்திர எண் : 913,914/21-03-202403-

3. அரசாணை நிலை எண் 79 , வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை , நாள்: 04-05-2017

4. திரு.புலமுத்து , திரு.அந்தோனி டெலி மனுநாள்: 17-04-2024

உத்தரவு:

திருநெல்வேலி மாவட்டம் , இராதாபுரம் ஊராட்சி ஒன்றியம் , கரைச்சுத்து உவரி கிராமம், உவரி ஊராட்சி சர்வே எண் 286/2A3, 2B2A, 350/1B2B1 & 350/1B2B2 இல் 2.42 ஏக்கர் 9791.00 ச.மீ பரப்பளவில் அமையும் குடியிறுப்பு மனைப்பிரிவுற்கு பார்வை 1 ல் காணும் கடிதத்தில் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மனைபிரிவு வரைபடத்திற்கு ம.வ/திமா.அ எண்: ROC. OM9GGVXk/2024/TCP நாள் 08-04-2024 என எண்ணிடப்பட்டு இறுதி ஒப்புதல் ஊராட்சியில் வழங்கிடப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை எண் (1) ல் காணும் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி மேற்படி இடத்தில் உள்ளாட்சிக்கு உன ஒப்படைப்பு செய்வதாக தெரிவிக்கப்பட்டுள்ள இடம் பார்வை (2) ல் காணும் தானப்பத்திரம் மூலம் உவரி ஊராட்சி க்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும் பார்வை (3) ல் காணும் அரசானைப்படி திட்டம் இல்லாத பகுதிக்கான நில உபயோக மாற்ற விதிகள் 2017 விதி 3-ன் படி பரிசீலனை கட்டணம் ரூ1000(ஆயிரம்) மற்றும் விதி எண் 9-ன் படி சந்தை நில மதிப்பீட்டு தொகையில் 3% தொகையான ரூ15275/- மனைபிரிவு கட்டணம் ரூ34000/- மொத்தம் ரூ 50275/- ஊராட்சி நிதியில் செலுத்தப்பட்டுள்ளது. எனவே இராதாபுரம் ஊராட்சி ஒன்றியம் உவரி ஊராட்சி கிராமம் சர்வே எண் : 286/2A3, 2B2A, 350/1B2B1 & 350/1B2B2 அமையும் குடியிறுப்பு 34 மனைப்பிரிவிற்கான இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது. மேற்படி வழங்கப்படும் இறுதி ஒப்புதலானது காலிமனையிடத்திற்கு மட்டுமே ஆகும் அம்மனை இடத்தில் கட்டப்படும் கட்டிடங்களுக்கு உரிய அனுமதி மனுதாரரால் தனியாக விண்ணப்பம் செய்து அரசின் விதிகளுக்கு உட்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் காலி மனையிடத்திற்கான இறுதி ஒப்புதலானது அரசு விதித்துள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்புதலளிக்கப்படுகிறது.

பெறுநர்:

திரு.புலமுத்து
திரு.அந்தோனி டெலி
சாந்தா பார்க்வே
உவரி

ஊராட்சி மன்றத் தலைவர்
உவரி ஊராட்சி

தலைவர்
உவரி ஊராட்சி
இராதாபுரம் ஒன்றியம்